**CC.No.298/2016 (JM.No.II, DHARMAPURI)**

**20.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–1 : திருமதி. மாரியம்மாள்,க/பெ.கோவிந்தன்**

**Crl.M.P.No.1420/2025 ன் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எங்கள் நிலத்தை சுற்றி வேலி போட்டுவிட்டார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் நிலத்தை வேறு ஒருவர் வேலி போட்டு இருந்தால் நான் புகார் அளித்திருப்பேன் என்றாலும், வேலி போட்டவுடன் நான் புகார் அளிக்கவில்லை. என்னுடைய புகாரில் காலை 07.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக கூறிவிட்டு முதல் விசாரணையில் 06.30 மணி என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் 07.30 மணிக்கு தான் நடந்தது. என்னுடைய புகாரிலோ, போலிஸார் விசாரணையிலோ என்னை வழிமறித்து தாக்கினர் என்று குறிப்பிடவில்லை என்றால் நான் போலிஸாரிடம் அவ்வாறு தான் கூறினேன். நான் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது தெரிந்து 5 நபர்கள் அடித்தார்கள் என்று கூறினேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலோ, போலிஸார் விசாரணையிலோ 5 நபர்கள் அடித்ததாக கூறவில்லை என்றால் சரியல்ல. நான் போலிஸாரிடம் கூறினேன். விஜி என்ற நபர் அடித்ததாக நான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விஜி என்ற நபர் அடித்ததை நான் புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ கூறவில்லை என்றால் நான் போலிஸாரிடம் கூறினேன். நான் முதல் விசாரணையில் கூறியது போல கல்லால் இடுப்பின் மீது தாக்கியதாக போலிஸ் விசாரணையிலோ, புகாரிலோ கூறவில்லை என்றால் சரியல்ல, நான் கூறினேன். எதிரி ரமேஷ் என்னை அடித்து ஜாக்கெட்டை கிழித்ததாக முதல் விசாரணையில் கூறியது போல போலிஸார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல, நான் கூறினேன். அரசு மருத்துவமனையில் சரவணன் என்பவர் என்னை அனுமதித்தாக கூறினேன் என்றால் சரிதான். ஆனால் போலிஸார் விசாரணையில் என் கணவர் சென்று அனுமதித்தாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, சரவணன் என்று தான் கூறினேன். என் கணவர் என்னுடன் அரசு மருத்துவமனைக்கு வரவில்லை என்றாலும், அதனால் தான் என் கணவர் மாலை 05.30 மணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எங்களை யாரும் தாக்கவில்லை என்றாலும், அப்படி நடந்திருந்தால் உடனே அரசு மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றாலும், நான் பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.20 17:48:17 +0530

**CC.No.298/2016 (JM.No.II, DHARMAPURI)**

**20.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–2 : திரு. கோவிந்தன், த/பெ.அருணாச்சலம்**

**Crl.M.P.No.1420/2025 ன் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. அடிபட்டவுடன் நானும், அ.சா.1ம் தன்னிச்சையாக சென்று அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் GH க்கு ஊர் கவுண்டர் ஞானவேல் என்பவர் எங்களை அழைத்து சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் போலிஸார் விசாரணையில் நாங்களாகவே சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவியான அ.சா.1 புகார் அளிக்கும் போது நான் உடன் இல்லை. காலை 06.00 மணிக்கு அடிப்பட்டதாக கூறப்படும் போது மாலை 04.35 மணிக்கு தான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு காலை 08.30 மணிக்கே சென்றுவிட்டேன். நான் என் மனைவியுடன் அரசு மருத்துவமனைக்கு செல்லாததால் தான் அவர் புகார் அளித்தது எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. விஜி என்பவர் அடித்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி விஜி என்பவர் அடித்ததை போலிஸார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு தான் இந்த சம்பவத்தை சென்று பார்த்தேன் என்றாலும், இந்த சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், என் மனைவி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.20 17:48:25 +0530

**CC.No.298/2016 (JM.No.II, DHARMAPURI)**

**20.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW–3 : திரு. கணேசன், த/பெ.கோவிந்தன்**

**Crl.M.P.No.1420/2025 ன் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எங்களுடைய ஊர் கவுண்டர் பெயர் ஞானவேலா அல்லது சரவணா என்று கேட்டால் சரவணன் தான். காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 யை நான் தான் GH க்கு சென்று அனுமதித்தேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், சம்பவயிடத்தில் இருந்திருந்தால் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகி என்னுடைய பெற்றோரை தாக்கிய போது நான் தடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோரை அடித்தபின்பு நான் சென்று தடுத்தேன். நான் சொல்வது பொய் என்றாலும், அவ்வாறு நான் சென்று தடுத்திருந்தால் அதனை முதல் விசாரணையிலும், போலிஸார் விசாரணையிலும் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. "என்னுடைய அம்மாவின் தலை முடியை பிடித்து இழுத்து ஜாக்கெட்டை கிழித்துவிட்டார். அதை கேட்க சென்ற என் அப்பாவை அடித்துவிட்டார்" என்று தான் கூறியுள்ளேன் என்றாலும், நான் சம்பவயிடத்தில் இருந்து அதனை பார்த்தேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்." நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் நான் சென்று சேர்த்தாக குறிப்பு ஏதும் இல்லை என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், நான் சம்பவயிடத்தில் இல்லாததால் தான் அ.சா.1 மற்றும் 2 யை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும், என் அம்மா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.20 17:48:32 +0530

**CC.No.298/2016 (JM.No.II, DHARMAPURI)**

**20.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW–4 : திருமதி. சுதா, க/பெ.ஆனந்தராஜ்**

**முதல் விசாரணை**

நான் தொப்பையாறில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் 1 முதல் 4 வரையுள்ளவர்களை எனக்கு தெரியும். அ.சா.1 முதல் 3 வரை தெரியும். அ.சா.1 என்னுடைய அம்மா ஆவார். நான் என்னுடைய அம்மா வீட்டிற்கு வந்த போது 2016 ம் வருடம் ஒரு நாள் காலை சுமார் 07.30 மணிக்கு என்னுடைய அம்மா நாராயணன் என்பவரின் நிலத்தில் தண்ணீர் பிடிக்க சென்ற போது மாதையன் தடுத்து நிறுத்தி என் அம்மாவிடம் பேசி கொண்டிருந்தார். பேசி கொண்டிருக்கும் போதே மாதையன் என் அம்மாவின் தலையின் மீது கம்பியால் அடித்தார். கோபாலும் கட்டையை எடுத்து வந்து என் அம்மாவை அடித்தார். அப்போது ரமேஷ் என்பவர் என் அம்மாவின் ஜாக்கெட்டை பிடித்து கிழித்துவிட்டார். காமராஜ், விஜி ஆகிய இருவரும் மாறிமாறி என்னுடைய அம்மாவை காலால் எட்டி உதைத்தனர். இதை பார்த்து நானும், என்னுடைய அப்பாவும் சம்பவயிடத்திற்கு ஓடினோம். அப்போது காமராஜ், விஜி ஆகிய இருவரும் கை மற்றும் கட்டையால் தாக்கினார்கள். எதிரிகள் தாக்கியதில் சம்பவயிடத்திலேயே மயக்கமடைந்துவிட்டார். ஆம்புலென்ஸ் மூலமாக தொப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதல் உதவி செய்து மீண்டும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். அப்போது தொப்பூர் போலிஸார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிஸார் விசாரணையில் விஜி என்பவர் அடித்ததாகவும், நான் ஓடிச் சென்று நானும், என்னுடைய அப்பாவும் ஓடினோம் என்றும், GH க்கு அழைத்து சென்றோம் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றாலும், அதனால் தான் நீதிமன்ற முதல் விசாரணையிலும், போலிஸார் விசாரணையிலும் முரண்பட்டு சங்கதிகளை கூறவில்லை என்றால் சரியல்ல. அடிப்பட்டவுடன் சம்பவயிடத்திற்கு நானும், என்னுடைய அண்ணாவும் சென்று அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேற்படி சங்கதியை போலிஸார் விசாரணையிலோ, முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். தொப்பூர் அரசு மருத்துவமனைக்கு காலை 08.30 மணிக்கு சென்றோம். இந்த சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், என் அம்மா கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.20 17:48:40 +0530